**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 1/2025**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. அக்பர்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. முஸ்தப்பா மணியன்** | **Calling** | : | **பழைய இரும்பு வியாபாரம்** |
| **Village** | : | **பேகம்பூர்** | **Religion** | : | **முஸ்லீம்** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **48** |
| | | | **Dated** | : | **11.12.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**1, 3, 4 எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 3), **திரு. அக்பர்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பழைய இரும்பு வியாபாரம் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. ஏதோ அடிதடி பிரச்சனை என்று சொன்னார்கள். நான் பள்ளிவாசலுக்கு உள்ளே தொழுகைக்குப் போய்விட்டேன். மைதீனுக்கும், யாருக்கும் சண்டை என்பது எனக்கு தெரியாது. மைதீனை நான் மருத்துவமனையில் பார்க்கப் போயிருந்ததேன். அப்போது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 07.05.2011ம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு திண்டுக்கல், மக்கான் பள்ளியில் மதம் சம்மந்தமாக பேசிக் கொண்டு இருந்தபோது, மைதீன் பாட்ஷா, அபுபக்கர் ஆகியோர் KVR மெருகுக்கடை முன்பு உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்தார்கள் என்றும், அப்போது இந்த வழக்கின் 1-ம் எதிரி இப்ராம்ஷா, சம்சுதீன் என்பவரை இருசக்கர வாகனத்தில் ஏற்றிக் கொண்டு வந்தார் என்றும், மற்றொரு எமஹா மோட்டார் சைக்கிளில் மைதீன் மற்றும் கொட்டாய் என்ற யூசுப் மௌலானா இருவரும் வந்தார்கள் என்றும், மேற்படி எதிரிகள் நால்வரும் மைதீன் பாட்ஷாவும், அபுபக்கரும் பேசிக் கொண்டு இருந்த இடத்திற்கு சென்று, அவர்களை ஓடவிடமால் மறித்து நின்று கொண்டார்கள் என்றும், அப்பொழுது 1-ம் எதிரி இப்ராம்ஷா தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து அபுபக்கரைப் பார்த்து நீ தான்டா எனக்கு எதிராக சாட்சி சொல்றவன் என்று கத்தியால் வெட்டினார் என்றும், அதை மைதீன் பாட்ஷா தடுத்தார் என்றும், இந்த சமயத்தில் அபுபக்கர் அவர்களை தள்ளிவிட்டு ஓடிவிட்டார் என்றும், அதனால் ஆத்திரமடைந்த அனைவரும் மைதீன் பாட்ஷாவை பார்த்து, இவனை குத்திக் கொல்லுங்கடா, இவன்தான் அவரை தப்ப விட்டவன் என்று கத்தினார்கள் என்றும், இப்ராம்ஷா, மைதீன் பாட்ஷாவை நோக்கி நீதான்டா தப்பிக்கவிட்டாய், உன்னை உயிரோடு விடக்கூடாது என்று சத்தம்போட்டு, இத்தோடு செத்து தொலைந்துபோடா என்று கத்தியால் மாறி மாறி

குத்தினார் என்றும், தெருவில் இருந்தவர்கள் இந்த சம்பவத்தைப் பார்த்து சிலர் வரவும், நாங்களும் அருகில் போகவும், எதிரிகள் அவர்கள் வந்த இரண்டு மோட்டார் சைக்கிளில் தப்பி சென்றுவிட்டார்கள் என்றும், மைதீன் பாட்ஷாவிற்கு இடது தோள்பட்டை, இடது பக்க வயிற்றில் இரண்டு இடத்தில் இரத்தக்காயம், இடது காது பின்புறம், இடது மார்பில் இரண்டு இடங்களில் இரத்தக்காயம் ஏற்பட்டு இருந்தது என்றும், மருத்துவமனைக்கு கூப்பிட்டதற்கு அவர் வரமறுத்துவிட்டார் என்றும், மைதீன் பாட்ஷாவின் சகோதரி சகீரா பானுவிற்கு தகவல் சொல்லி அவர் வந்து, அந்த வழியாக வந்த போக்கு வண்டியில் ஏற்றி மைதீன் பாட்ஷாவை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளோடு சமாதானமாகிவிட்டு, உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 11.12.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2025.12.11 18:31:35 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 1/2025**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. அபுபக்கர்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. நைனா முகமது** | **Calling** | : | **மொபைல் சர்வீஸ் வேலை** |
| **Village** | : | | **Religion** | : | **முஸ்லீம்** |
| **District** | : | **ராமநாதபுரம்** | **Age** | : | **42** |
| | | | **Dated** | : | **11.12.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1, 3, 4 எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 2), **திரு. அபுபக்கர்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து மொபைல் சர்வீஸ் செய்யும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. பட்டியல் சாட்சி – 1 மைதீன் பாட்ஷா என்னுடைய உறவினர். அவருக்கு காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார் என்று கேள்விப்பட்டேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு

அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

போலீசார் விசாரணையில் நானும், மைதீன் பாட்ஷாவும் நண்பர்கள் என்றும், எனக்கும், 1–ம் எதிரி இப்ராம்ஷாவிற்கும் அடிக்கடி பிரச்சனை ஏற்படும் என்றும், இந்த சூழ்நிலையில் என்னை 1–ம் எதிரி கத்தியால் குத்தி திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலையத்தில் கொலை முயற்சி வழக்கு பதிவு செய்து, நீதிமன்ற விசாரணையில் உள்ளது என்றும், இப்ராம்ஷா என்னோடு சமரச பேச்சு நடத்தியதை மறுத்ததால், இப்ராம்ஷா என்னை மிரட்டி வந்தார் என்றும், நான் இதன் காரணமாக ராமநாதபுரம் சென்று விட்டேன் என்றும், கடந்த 07.05.2011ம் தேதி நான் திண்டுக்கல் வந்து மைதீன் பாட்ஷாவுடன் மது அருந்திவிட்டு, என் நண்பர் வீட்டின் அருகே KVR மெருகுக்கடை முன்பு உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்தோம் என்றும், அப்போது இந்த வழக்கின் 1–ம் எதிரி இப்ராம்ஷா, சம்சுதீன் என்பவரை இருசக்கர வாகனத்தில் ஏற்றிக் கொண்டு வந்தார் என்றும், மற்றொரு எமஹா மோட்டார் சைக்கிளில் மைதீன் மற்றும் கொட்டாய் என்ற யூசுப் மௌலானா இருவரும் வந்தார்கள் என்றும், மேற்படி எதிரிகள் நால்வரும் நாங்கள் பேசிக் கொண்டு இருந்த இடத்திற்கு வந்து, எங்களை ஓடவிடமால் மறித்து நின்று கொண்டார்கள் என்றும், அப்பொழுது 1–ம் எதிரி இப்ராம்ஷா தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து என்னைப் பார்த்து நீ தான்டா எனக்கு எதிராக சாட்சி சொல்றவன் என்று கத்தியால் வெட்டினார் என்றும், அதை மைதீன் பாட்ஷா தடுத்தார் என்றும், இந்த சமயத்தில் நான் அவர்களை தள்ளிவிட்டு ஓடிவிட்டேன் என்றும், அதன்பிறகு நான் ஓடிவிட்டதால் ஆத்திரமடைந்த அனைவரும் மைதீன் பாட்ஷாவை பார்த்து, இவனை குத்திக் கொல்லுங்கடா,

இவன்தான் அவரை தப்ப விட்டவன் என்று கத்தினார்கள் என்றும், இப்ராம்ஷா, மைதீன் பாட்ஷாவை நோக்கி நீதான்டா தப்பிக்கவிட்டாய், உன்னை உயிரோடு விடக்கூடாது என்று சத்தம்போட்டு, இத்தோடு செத்து தொலைந்துபோடா என்று கத்தியால் மாறி மாறி குத்தினார் என்றும், தெருவில் இருந்தவர்கள் இந்த சம்பவத்தைப் பார்த்து சிலர் வரவும், நாங்களும் அருகில் போகவும், எதிரிகள் அவர்கள் வந்த இரண்டு மோட்டார் சைக்கிளில் தப்பி சென்றுவிட்டார்கள் என்றும், மைதீன் பாட்ஷாவிற்கு இடது தோள்பட்டை, இடது பக்க வயிற்றில் இரண்டு இடத்தில் இரத்தக்காயம், இடது காது பின்புறம், இடது மார்பில் இரண்டு இடங்களில் இரத்தக்காயம் ஏற்பட்டு இருந்தது என்றும், மருத்துவமனைக்கு கூப்பிட்டதற்கு அவர் வரமறுத்துவிட்டார் என்றும், மைதீன் பாட்ஷாவின் சகோதரி சகீரா பானுவிற்கு தகவல் சொல்லி அவர் வந்து, அந்த வழியாக வந்த போக்கு வண்டியில் ஏற்றி மைதீன் பாட்ஷாவை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும் என்னிடம் சொன்னார்கள் என்று சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளோடு சமாதானமாகிவிட்டு, உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 11.12.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2025.12.11 18:32:42 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.